
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மதுரையில் 104 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக மதுரையில் திங்கள்கிழமை (ஏப். 21) 104 டிகிரி வெயில் பதிவானது. இதேபோல தருமபுரி, கரூர் பரமத்தி, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

மதுரை 104

சேலம், வேலூர் 103

தருமபுரி, பாளையங்கோட்டை 102

கரூர் பரமத்தி, திருச்சி 101

கோவை 99

சென்னை மீனம்பாக்கம் 96

சென்னை நுங்கம்பாக்கம் 94

கொடைக்கானல் 71

**வேளாண் பல்கலை. துணைவேந்தருக்கு கௌரவ கர்னல் அந்தஸ்து**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமிக்கு, தேசிய மாணவர் படையின் கௌரவ கர்னல் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படையின் இயக்குநர் ஜெனரல் லெப்டினன்ட் ஜெனரல் ஏ.சக்ரவர்த்தி, இந்தக் கௌரவ கர்னல் அந்தஸ்தை வழங்கினார்.

இந் நிகழ்ச்சியில் கோவை மண்டல தேசிய மாணவர் படை அதிகாரி கர்னல் இர்ஷாத் எ.கான் பேசுகையில், ""தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமிக்கு கௌரவ கர்னல் அந்தஸ்தை வழங்கியிருப்பது, இந்திய அரசின் கெஜட் குறிப்பில் இடம்பெற்றுள்ளது" என்றார்.

துணைவேந்தர் கு.ராமசாமி பேசுகையில், ""நான் பல விருதுகளை பெற்றிருந்தாலும், மதிப்புமிக்க கௌரவ கர்னல் அந்தஸ்து வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்தது" என்றார்.

நிகழ்ச்சியில் கோவை நான்காவது பட்டாலியன் தேசிய மாணவர் படை அதிகாரிகளான லெப்டினன்ட் கர்னல் பி.எஸ்.அலுவலியா, லெப்டினன்ட் கர்னல் ஜோசப் ஆன்டனி, பல்கலைக்கழக தேசிய மாணவர் படை அதிகாரி லெப்டினன்ட் கு.ம.செல்லமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வரத்துக் குறைவால் மீன் விலை உயர்வு**

**திருவாடானை,**

திருவாடானை பகுதியில் மீன் வரத்துக் குறைவாக உள்ளதால் மீன் விலை உயர்ந்துள்ளது.

திருவாடானை தாலுகா தொண்டி, நம்புதாளை, எஸ்.பி பட்டிணம், முள்ளிமுனை காரங்காடு போன்றவை கடற்கரை பகுதியாகும்.

தற்போது 45நாள்கள் மீன் பிடி தடைக்காலம் என்பதால் விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்வதில்லை.

நாட்டுப்படகு மீனவர்களும், கரையோர மீன் பிடியாளர்களும் மட்டுமே மீன் பிடித்து வருகின்றனர். இதனால் மீன் வரத்து குறைந்துள்ளது.

வரத்து குறைவால் மீன் விலை உயர்ந்து வருகிறது. ரூ.250-க்கு விற்ற விலை மீன் ரூ.400-க்கும், ரூ.300-க்கு விற்ற பாறை மீன் ரூ.500-க்கும், ரூ.300-க்கு விற்ற நண்டு ரூ.600-க்கும், ரூ.300-க்கு விற்ற முரல் மீன் ரூ.600-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**அருப்புக்கோட்டையில் மழை**

**அருப்புக்கோட்டை,**

அருப்புக்கோட்டையில் நகரப்பகுதி முழுவதும் திங்கள்கிழமை பிற்பகலில் திடீரென அரை மணி நேரம் இடியுடன் கூடிய மழை பெய்தது.

அருப்புக்கோட்டையில் கடந்த பல நாள்களாக கடும் வெயில் சுட்டெரிக்கிறது. தற்போது நண்பகல் வேளைகளில் அனல்காற்றும் வீசுவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வெளியே வர முடிவதில்லை.

திங்கள்கிழமை 3.35 மணிக்கு திடீரென மழை பெய்யத் துவங்கியது. சுமார் 25 நிமிடம் பெய்த இடியுடன் கூடிய மழையால் ஓரளவு வெப்பம் தணிந்தது.

**கொப்பரை, தேங்காய் ஏலம்**

**மொடக்குறிச்சி,**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியைச் சார்ந்த விவசாயிகள் 242 மூட்டைகளில் 6 ஆயிரம் கிலோ கொப்பரையும், 14,697 தேங்காய்களையும் கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ 105 ரூபாய் 15 காசுக்கும், குறைந்தபட்சமாக 101 ரூபாய் 55 காசுக்கும், 2-ம் தர கொப்பரை அதிகபட்ச விலையாக 104 ரூபாய் 45 காசுக்கும், குறைந்தபட்சமாக 76 ரூபாய் 70 காசுக்கும் என மொத்தம் 6 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

தேங்காய் அதிகபட்ச விலையாக ஒரு டன் 33 ஆயிரத்து 542 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 23 ஆயிரத்து 791 ரூபாய்க்கும் மொத்தம் ரூ.1 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தேர்தல் அறிக்கையில் 4 அம்சங்களை சேர்க்க விவசாயிகள் கோரிக்கை**

**புதுடில்லி**: அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில், வேளாண் துறையின் மிக முக்கியமான, நான்கு அம்சங்களை சேர்க்க வேண்டும் என, இந்திய விவசாயிகள் சங்க கூட்டமைப்பு (சி.ஐ.எப்.ஏ., ) கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: நீண்ட கால அடிப்படையில், சர்க்கரை ஏற்றுமதிக்கு நிலையான கொள்கையை உருவாக்க வேண்டும். இதனால், சர்க்கரை ஆலைகளின் பணப்புழக்கம் அதிகரிக்கும். இதன் மூலம், அவை, கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகையை உடனுக்குடன் வழங்க முடியும். கரும்பு விவசாயிகளை காக்கும் பொருட்டு, எத்தனால் விலை நிர்ணயத்தை, பெட்ரோல் விலையுடன் இணைக்க வேண்டும். வேளாண் இயந்திரங்கள் வாங்க மானிய உதவியுடன், விவசாயிகளுக்கு, 4 சதவீத வட்டியில் கடன் கிடைக்க வகை செய்ய வேண்டும் சொட்டு நீர் மற்றும் நீர் தெளிப்பான் பாசனத்தை ஊக்குவிக்கும் வகையில், 90 சதவீதம் மானிய உதவி வழங்க வேண்டும். மேற்கண்ட முக்கிய அம்சங்களை, அரசியல் கட்சிகள் அவற்றின் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டு, அவற்றை தேர்தலுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மீன் விலை கடும் உயர்வு

**ராமேஸ்வரம்**: மீன்கள் இனப் பெருக்கத்திற்காக, ஏப்.,15 முதல் மே 29 வரை, விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், மீன்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. கரை வலை, நாட்டுப்படகுகளில் கிடைக்கும் பெரிய மீன்களை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர். விலை விபரம்: இரு வாரங்களுக்கு முன் ரூ.180க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ விலமீன் தற்போது 300க்கும், 200க்கு விற்ற கெளக்கான் 300, 150க்கு விற்ற செறையா மீன் 250, 150க்கு விற்ற சிறிய நகரை 300, 160க்கு விற்ற சிறிய கணவாய் 300, 60க்கு விற்ற சூடை 100, 150க்கு விற்ற ஊடகம் மீன் 300க்கு விற்கப்படுகிறது.

## மீன் விலை உயர்வு: அசைவ பிரியர்களுக்கு சிக்கல்

**சென்னை**: மீன்பிடி தடையால், வரத்து குறைந்து, தமிழகம் முழுவதும் மீன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மீன் விலை, வழக்கத்தை விட, 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

மீன்களின் இன விருத்தியைக் கருத்தில் கொண்டு, தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட கிழக்கு கடற்கரை பகுதிகளில், ஏப்., 15 முதல், 45 நாட்களுக்கு மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. கட்டுமரம், பைபர் படகுகள் மட்டுமே மீன் பிடிக்கச் செல்கின்றன. இதன் மூலம், தேவையில், பத்தில் ஒரு பங்கே கிடைக்கிறது. தடைக்கு முன் வந்த விசைப்படகுகளில் இருந்த மீன்களும், நான்கு நாட்களில் தீர்ந்து விட்டதால், இரண்டு நாட்களாக மீன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, தமிழகத்தில் மீன் விலை, 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சென்னையில் கடந்த வாரத்தில், 1,200 ரூபாய்க்கு விற்ற முதல் ரக இறால், 1,300 ரூபாய்; 350 ரூபாய்க்கு விற்ற, இரண்டாம் ரக இறால், 450 ரூபாய்; 550 ரூபாய்க்கு விற்ற, முதல் ரக வஞ்சிரம், 720 ரூபாய்; 300 ரூபாய்க்கு விற்ற, இரண்டாம் ரக வஞ்சிரம், 430 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. முன், 150 ரூபாய்க்கு விற்ற நண்டு, 200 ரூபாய்; 200 ரூபாய்க்கு கிடைத்த சீலா, 280 ரூபாய் என அதிகரித்திருக்கிறது. ஞாயிறு என்றால், சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மக்கள் கூட்டம் அலைமோதும். நேற்று குறைந்த அளவிலான ஆட்களே வந்தனர். எகிறிய விலையைப் பார்த்து, துக்கடா மீன்களை வாங்கிச் சென்றனர். இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், 'தடையால், மீன் விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது

ஆகிவிட்டது. மே மாதம் வரை, அசைவ பிரியர்கள் கொஞ்சம், மீன் ருசிப்பதை மறக்க வேண்டியது தான். வெளிமாநில மீன்கள் வந்தாலும், தேவை அதிகம் உள்ளதால், விலை குறைய வாய்ப்பில்லை' என்றனர்.

### மேட்டூர் நீர்மட்டம் மளமளவென சரிவு

குடிநீர் தேவைக்காக, 6,000 கன அடி நீர் திறப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம், 'மளமள'வென சரிந்து வருகிறது.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில், கடந்த 17ல், நீர்மட்டம், 42 அடியாக இருந்தது. நீர் இருப்பு, 13.664 டி.எம்.சி.,யாக சரிந்தது. டெல்டா மாவட்டங்களில் குடிநீர் தேவைக்கு, 6,000 கன அடி திறக்கப்பட்டுள்ளது. இதனால், கடந்த நான்கு நாட்களில் நீர்மட்டம், 'மளமள'வென சரிந்து வருகிறது. நேற்று நீர்மட்டம், 39.320 அடியாகவும், நீர் இருப்பு, 11.942 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. அணைக்கு வினாடிக்கு, 247 கன அடி நீர் மட்டுமே வந்து கொண்டு இருக்கிறது.

### கடலில் மீன் பிடிக்க தடை துள்ளிக்குதிக்குது விலை!

**கோவை** : மீன்பிடி தடைகாலம் அமல்படுத்தப்பட்டுள்ளதால், வரத்து குறைந்து, மீன் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தினமும் பல ஆயிரம் டன் மீன்கள், உணவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. துாத்துக்குடி, நாகப்பட்டினம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்கள் முக்கிய மீன் விற்பனை தளமாக உள்ளன. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மீன், விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகின்றன.தமிழக கடலோர பகுதிகளில், ஏப்., 15 முதல் மே 29 வரை 45 நாட்கள் மீன்பிடி தடைகாலத்தை அரசு அமல்படுத்தியுள்ளது. மீனவர்கள் ஆழ்கடலுக்கு, செல்லாமல் 20 கி.மீ.,க்குள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவர். இந்நிலையில், பல்வேறு பகுதிகளிலிருந்து வழக்கமாக கோவைக்கு வரும் மீனின் அளவு குறைந்துள்ளது. இதையடுத்து, மீன் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.கோவை மாவட்ட மீன் விற்பனையாளர்கள் சங்க உறுப்பினர் அப்பாஸ் கூறுகையில், "கோவைக்கு தினமும் 450 டன்னுக்கும் அதிகமான மீன்கள் விற்பனைக்காக கொண்டு

வரப்படுகின்றன. தேவை அதிகளவில் உள்ளதால், கடந்த சில நாட்களில் மீன் விலை கணிசமாக உயர்ந்துள்ளது."கடந்த சில வாரங்களுக்கு முன் 600 முதல் 700 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு கிலோ வஞ்சிரம் மீன், தற்போது 900 முதல் 1000 ரூபாய் வரை விற்பனை ஆகிறது. இதேபோல் பல்வேறு வகை மீன்களின் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது கேரளாவிலிருந்து மீன் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஒரிரு வாரங்களில் கேரளாவிலும் மீன்பிடி தடைகாலம் அமல்படுத்தப்படும். அப்போது விலை இன்னும் உயரும் நிலை ஏற்படும்," என்றார்.

## தேங்காய் வரத்து குறைவால் கொப்பரை விலை உயர்ந்தது

**நத்தம்** : நத்தம் பகுதிகளில் வறட்சியால், 50 சதவீதம் தென்னை மரங்கள் காய்ந்துபோனதால், தேங்காய் வரத்து குறைந்து கொப்பரை பருப்புக்கள் விலை உயர்ந்துள்ளது.

நத்தம், சாணார்பட்டி பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டிருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் போதுமான மழை பெய்ததால், விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து தென்னை சாகுபடிக்கேற்ற தண்ணீர் கிடைத்தது.

மரங்கள் செழிப்படைந்து அதிகளவு தேங்காய் மகசூல் ஏற்பட்டது. இதனால் விலை குறைந்து கொப்பரை கிலோ ரூ. 30 முதல் 40 க்கு விற்பனையானது. முதல் தர காய் ரூ. 5 க்கும், 2 ம் தரம் ரூ. 4 க்கும், 3 ம் தரம் ரூ. 2.50 க்கும் விற்றது.இந்நிலையில், கடந்த மூன்று ஆண்டுகள் பருவ மழையின்றி ஏற்பட்ட வறட்சியால், 50 சதவீதம் தென்னை மரங்கள் பட்டுப்போய் காணப்படுகின்றன.மீதமுள்ள மரங்கள் ஆயிரம் அடி வரை போர்வெல் அமைத்து கிடைக்கும் தண்ணீரை வைத்து காப்பாற்றப்பட்டு வருகின்றன. இதனால், மரங்களில் மிக குறைந்தளவே மகசூல் கிடைக்கிறது. தற்சமயம் நத்தம் மார்க்கெட்டில் தேங்காய் வரத்துக்கள் மிகமிக குறைந்துள்ளதால், ஒரு கிலோ எண்ணெய் கொப்பரை பருப்புக்கள் ரூ. 85 முதல் ரூ. 82 வரை விற்கப்படுகிறது. ஆனால், கொப்பரை பருப்புக்கள் கிடைக்காமல் மார்க்கெட்டில் கமிஷன் கடைகள் வெறுமனே காணப்படுகின்றன.

## ஆடு, மாடுகளை பாதுகாக்க கால்நடைதுறை அறிவுறுத்தல்

**பழநி** : தற்போது கோடை வெயிலினால், கால்நடைகளுக்கு, பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்க, கால்நடை பராமரிப்புதுறையினர் ஆலோசனை வழங்கிவருகின்றனர். பழநி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: போதிய மழையில்லாமல், பழநிவட்டாரத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், கறவைமாடுகளின் பால் உற்பத்தி பாதிக்கப்பட கூடும். ஏனெனில் இந்தநேரத்தில் ஈக்களின் தொல்லை அதிகமாக இருக்கும். ஆகையால் தொழுவங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மாடுகளுக்கு இரண்டுமுறை தண்ணீர் தெளிக்கலாம்.இறைச்சி இனக்கோழிகள் அதிக வெப்பத்தை வெளியேற்ற முடியாமல், இறக்க வாய்ப்பு உள்ளது. இதனால், வீட்டின் இடவசதியை அதிகரிக்க வேண்டும். 100 கோழிகளுக்கு வைட்டமின் சி 500 மி.லி.,கொடுக்கலாம். அல்லது ஒரு எலுமிச்சம் பழத்தை பிழிந்து 10 லிட்டர் நீர் சேர்த்து கொடுக்காலம்.

ஆடு,மாடு,கோழி போன்றவற்றை நிழலான இடத்தில் வைத்து பராமரிக்கவேண்டும். வறட்சியினால் ஆடுகளுக்கு மேய்ச்சல் கிடைப்பது அரிதாகியுள்ளதால், குடற்புழுத்தொல்லை இருப்பதால், குடற்புழுநீக்கம் செய்ய வேண்டும், என்றார்.

## வெள்ளாடுகளுக்கு தீவன பற்றாக்குறை; புல்வகைகள் மானியத்தில் வழங்க முடிவு

**திண்டுக்கல்** : வெள்ளாடுகளுக்கான தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக வறட்சியை தாங்கும் புல் வகைகள், மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் வசிப்பவர்கள், அதிக எண்ணிக்கையில் வெள்ளாடுகளை வளர்த்து வருகின்றனர். ஓரளவிற்கு வளர்ச்சியடைந்த கிடா குட்டிகளை, இறைச்சிக்காக விற்பதன் மூலம் நல்ல லாபம் கிடைக்கும் என்பதால், அவற்றை பராமரிப்பது, தீவனம் வழங்குவதில் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து வறட்சி நிலவுவதால், கால்நடைகளுக்கான தீவனங்கள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பசுமாடுகளை காப்பாற்றுவதற்காக மானிய விலையில் வைக்கோல் வினியோகிக்கும் மையங்கள், மாவட்டத்தின் பல்வேறு பகுதியில்

துவக்கப்பட்டுள்ளது.இதே போல், வெள்ளாடுகளின் தீவன பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, வறட்சியை தாங்கி வளரும் வேப்பங்கன்று, சூபா புல், கிளிசிரிடியா தாவர கன்று மானியத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.வரப்பு ஓரங்களில் இவற்றை நடுவதன் மூலம், ஒரு சில மாதங்களில் தேவையான தீவனத்தை சேகரிக்கலாம், என விவசாயிகளிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. புல்வகைகளை மானியத்தில் வினியோகிக்க கால்நடைத்துறை முடிவு செய்துள்ளது.

## விசைப்படகிற்கு தடை; மீன்கள் விலை உயர்வு

**திண்டுக்கல்** : விசைப்படகுகள் கடலுக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பதால், மீன்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.

மீன்களின் இனப்பெருக்கத்திற்காக, ஆண்டுதோறும் மூன்று மாதங்கள் விசை படகுகள் கடலுக்குள் செல்ல தடை விதிக்கப்படும். தமிழகத்தின் கடற்கரை பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள், மீன்களின் இனப்பெருக்க காலத்தில் கடலில் வலை வீசமாட்டோம் என்ற ஒப்பந்தத்தை ஆண்டுதோறும் மீறாமல் கடைபிடித்து வருகின்றனர். கட்டு மரம் மற்றும் பாய்மர படகுகளில் சென்று மீனவர்கள் மீன் பிடிக்கலாம். இதன் மூலம் குறைந்த அளவிலேயே மீன்கள் கிடைக்கும் என்பதால், அவற்றின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ. 200 க்கு விற்கப்பட்ட விளமீன் தற்போது ரூ. 280க்கும், இறால் ரூ. 250 லிருந்து ரூ. 600 ஆகவும், நெய் மீன் ரூ. 550 லிருந்து ரூ. 700 ஆகவும், நண்டு ரூ. 100 லிருந்து ரூ. 200 ஆகவும் அதிகரித்துள்ளது.அனைத்து ரக மீன்களின் விலையும் குறைந்தபட்சமாக ரூ. 80 லிருந்து அதிகபட்சமாக ரூ. 250 வரை உயர்ந்துள்ளது. ஓட்டல்கள் மற்றும் நிரந்தர வாடிக்கையாளர்கள், மீன் விலை அதிகரித்திருந்தாலும் அவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 25 சதவீதம் விலை அதிகரிப்பு

**தமிழகத்தில் மழை இல்லாததால் 25 ஆண்டுகளில் இல்லாத அளவு மாம்பழ உற்பத்தி கடும் பாதிப்பு**



**சேலம்**: தமிழகத்தில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தான் மா அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாவட்டங்களில் சுமார் பல லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நடுசாலை, சேலம் பெங்களூரா, இமாம்பசந்த், பங்கனப்பள்ளி, குதாதத், மல்கோவா உள்பட பல்வேறு ரக மாம்பழங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கடந்தாண்டு போதிய மழை இல்லாததால், நடப்பாண்டு மாம்பழங்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்து ரக மாம்பழங்களின் விலையும் அதிகரித்துள்ளது. சேலம் மாம்பழ வியாபாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் நங்கவள்ளி, சூரபள்ளி, வனவாசி, மேட்டூர், ஜலகண்டாபுரம், ஓமலூர், கருமந்துறை, வரகம்பாடி, சங்ககிரி, சோரகை, திருச்செங்கோடு, காரிமங்கலம், பாலக்கோடு, அரூர், பர்கூர், காவேரிப்பட்டணம் உள்பட பல்வேறு பகுதிகளில் அதிகளவில் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பருவமழை போதிய அளவில் இல்லை. நிலத்தடி நீர் வளமும் குறைந்ததால் விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி மாமரங்களை காப்பாற்றினர். இருப்பினும் ஓரளவு மகசூல்

குறைந்தது. 2012ம் ஆண்டை காட்டிலும், கடந்தாண்டு மாம்பழம் வரத்து குறைந்து இருந்தது. ஆனால் நடப் பாண்டு வரத்து பாதியாக குறைந்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் இந்த அளவுக்கு மாம்பழம் உற்பத்தி பாதித்தது இல்லை. மாம்பழத்துக்கு பெயர்பெற்ற சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி 30 முதல் 40 டன் மாம்பழங்கள் வருகின்றன. கடந்தாண்டு இதே நாளில் 50 முதல் 60 டன் மாம்பழங்கள் வந்தன.

தற்போது ஒரு கிலோ மாம்பழம் ரகத்தை பொறுத்து கிலோ ரூ.30 முதல் ரூ.150 என விற்கப்படுகிறது. இது கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டு 25 சதவீதம் விலை அதிகரித்துள்ளது. மே முதல் வாரத்தில் இருந்து மாம்பழம் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. அப்போது தினசரி 100 டன்னாக வரத்து உயரும். இவ்வாறு மாம்பழ வியாபாரிகள் கூறினர்.

## ரூ.1.50 கோடிக்கு பருத்தி ஏலம்



**இடைப்பாடி**: சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில் 6,000 பருத்தி மூட்டைகள் வந்தன.

பிடி ரகம் குவிண்டால் ரூ.5 ஆயிரத்து 50 முதல் ரூ.6 ஆயிரத்து 89 வரையிலும், டிசிஎச் குவிண்டால் ரூ.6,300 முதல் ரூ.7,150 வரைக்கும் விற்பனையானது. 2வது ரகம் ரூ.5,600 முதல் ரூ.7,150 வரைக்கும் விற்பனையானது.

மொத்தம் ரூ.1.50 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**கிலோ ரூ40க்கு விற்பனை வரத்து குறைவால் புடலங்காய் விலை உயர்வு**

**சேலம்**, : வரத்து குறைவால் புடலங்காய் விலை கிலோவிற்கு ரூ.20 வரை உயர்ந்து, ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சேலம் மார்க்கெட்டிற்கு திருச்சி, சேலம் மாவட்டத்தின் தலைவாசல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து புடலங்காய் விற்பனைக்கு வருகிறது. மார்கழி மற்றும் தை ஆகிய மாதங்கள் புடலங்காய் சீசனாகும். இந்நிலையில் கடும் வெயில் மற்றும் மழை இல்லாததால் மார்க்கெட்டிற்கு புடலங்காய் வரத்து குறைந்து வருகிறது. இதனால் சேலம் மார்க்கெட்டில் புடலங்காய் விலை கிலோவிற்கு ரூ.20 வரை அதிகரித்துள்ளது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகை யில், கடும் வெயில் மற்றும் மழை இல்லாததால் புடலங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து வருவதால், போர் தண்ணீரையும் பயன்படுத்த முடியாத சூழலில் விவசாயிகள் உள்ளனர்.

இதனால் புடலங்காய் விளைச்சல் குறைந்து, மார்க்கெட்டிற்கு வரத்தும் குறைந்துள்ளது. தற்போது நாளொன்றுக்கு 30 கிலோ கொண்ட 20 சிப்பங்கள் வரை மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இதனால் கடந்த இரண்டு வாரத்தில் புடலங்காய் விலை கிலோவிற்கு ரூ20 வரை அதிகரித்து, தற்போது ரூ40 வரை விற்பனை செய்யப்படுகிறது என்றனர்.

**முலாம்பழம் கிலோ ரூ20 க்கு விற்பனை வரத்து அதிகரிப்பால்**

**போச்சம்பள்ளி,** : போச்சம்பள்ளி-மத்தூர் பகுதிகளில் முலாம் பழம் வரத்து அதிகரிப்பால் ஒரு கிலோ ரூ35க்கு விற்பனை செய்யப்பட்ட முலாம் பழம், கிலோ ரூ.20 க்கு விற்கப்படுகிறது போச்சம்பள்ளி சுற்று வட்டாரத்தில் கடந்த சில தினங்களாக கோடைக்கு முன்னதாக வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. இதனால் மக்கள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த வாரம் போச்சம்பள்ளி சுற்று வட்டாரத்தில் பரவலாக இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்தது. நீண்ட நாட்களுக்கு பிறகு பெய்த மழையால் மக்கள் சற்று மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது வெயிலின் தாக்கத்தில் இருந்து தங்களை காத்துக்கொள்ள இளநீர், ஜூஸ், தர்ப்பூசணி, நுங்கு, முலாம்பழம்

போன்றவைகளை மக்கள் வாங்கி சாப்பிட்டு வருகின்றனர். கடந்த வாரம் ஒரு கிலோ ரூ35 க்கு விற்பனை செய்யப்பட்ட முலாம் பழம் தற்போது வரத்து அதிகரிப்பால், விலை குறைந்து கிலோ ரூ20 க்கு விற்கப்படுகிறது. இதனால் முலாம் பழம் விற்பனை அதிகரித்துள்ளது.

## பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்து அடிப்பதால் நன்மை தரும் பூச்சிகள் இறக்கிறது

**தஞ்சை,** : பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்துகளை தேவையில்லாமல் அடிப்பதால் பயிர்களுக்கு நன்மை தரும் பூச்சிகள் இறந்துவிடுகிறது என்று வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்தார். தஞ்சை பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி 11வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. பாரத் கல்விக்குழும செயலாளர் புனிதா கணேசன் தலைமை வகித்தார். முதல்வர் வீராச்சாமி ஆண்டறிக்கை வாசித்தார். 499 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் பேசியதாவது:

ஒரு மனிதனை கல்வியால் மட்டுமே உயர்த்த முடியும். ஒரு நாடு கல்வியால் நல்ல வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைய முடியும். விவசாயத்தால் நாட்டை முன்னேற்றமடைய செய்ய முடியாது என்ற நிலை இருந்தது. ஆனால் இன்றைய இளைஞர்கள் விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றம் செய்து சாதனை படைத்து வருகின்றனர். பண்டைய காலத்தில் தானிய உற்பத்தி அதிகளவில் இருந்தது. இதனால் மக்களும் நல்ல திடகாத்திரமான உடல் அமைப்பை பெற்றிருந்தனர். இன்று தானிய உற்பத்தி குறைந்துவிட்டது. இதனால் மக்களிடம் திடகாத்திரமான உடல் அமைப்பு குறைந்துவிட்டது. பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்துகளை தேவையில்லாமல் அடிப்பதால் பயிர்களுக்கு நன்மை தரும் பூச்சிகளும் இறந்துவிடும். நமது நாட்டில் 200 லட்சம் டன் பயிர்கள் எலியால் சேதப்படுத்தப்படுகிறது. சேதமடையும் பயிர்களை பாதுகாக்க போதிய வசதிகள் இல்லை. பண்டைய காலத்தில் ஆந்தை என்ற பறவை எலிகளை பிடித்து திண்ணும். ஆனால் இன்று ஆந்தை என்ற பறவை இனமே எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. கல்வி என்பது வேலை தரும் ஒரு கருவி மட்டும் இல்லை. அது நல்ல பழக்கத்தையும் கற்று கொடுக்கும் என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் கார் விற்பனை சரிந்துள்ள நிலையில் டிராக்டர் விற்பனை 20 சதவீதம் உயர்வு**



**புதுடெல்லி,**

கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் பயணிகள் கார் மற்றும் வர்த்தக வாகனங்கள் விற்பனை சரிவடைந்துள்ள நிலையில், டிராக்டர் விற்பனை 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, மோட்டார் வாகனத் துறை நிறுவனங்களுக்கு நிம்மதி அளிப்பதாக அமைந்துள்ளது.

**வரலாறு காணாத...**

டிராக்டர் விற்பனை 2013–14–ஆம் நிதி ஆண்டில் வரலாறு காணாத அளவிற்கு 6,33,656–ஆக வளர்ச்சி கண்டுள்ளது.

உள்நாட்டில் கடனிற்கான வட்டி விகிதம் அதிகமாக உள்ளதால் அந்த நிதி ஆண்டில் பயணிகள் கார் விற்பனை 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6 சதவீதம் குறைந்தது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இதன் விற்பனை குறைந்துள்ளது.

நாட்டின் தொழில்துறை தொடர்ந்து மந்தமாக உள்ளது. பிப்ரவரி மாதத்தில் தொழில்துறை உற்பத்தி கடந்த ஒன்பது மாதங்களில் இல்லாத அளவிற்கு 1.9 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனையடுத்து 2013–14–ஆம் நிதி ஆண்டில் வர்த்தக வாகனங்கள் விற்பனை 20 சதவீதம் குறைந்துள்ளது.

**சவால்கள்**

இதுபோன்ற சவால்களுக்கு மத்தியிலும் டிராக்டர் விற்பனையில் இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாய தொழிலாளர் கிடைப்பதும் அரிதாக உள்ளது. கடந்த ஆண்டில் பருவமழையும் நன்றாக இருந்தது. தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால் டிராக்டர் விற்பனையில் அமோக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

**மகிந்திரா& மகிந்திரா**

மகிந்திரா & மகிந்திரா நிறுவனம் டிராக்டர் தயாரிப்பில் சர்வதேச அளவில் முன்னிலையில் உள்ளது. கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் உள்நாட்டில் இந்நிறுவனத்தின் விற்பனை 22 சதவீதம் உயர்ந்து எப்போதும் இல்லாத அளவிற்கு 2,57,270–ஆக வளர்ச்சி கண்டுள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் பன்முக பயன்பாட்டு வாகனங்கள் விற்பனை 18 சதவீதம் குறைந்துள்ளது.

புதுடெல்லியைச் சேர்ந்த எஸ்கார்ட்ஸ் நிறுவனத்தின் டிராக்டர் விற்பனை 13 சதவீதம் உயர்ந்து 68,963–ஆக அதிகரித்துள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் டிராக்டர் விற்பனை சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது என பிரைஸ் வாட்டர் ஹவுஸ் நிறுவனத்தின் பங்குதாரரும், மோட்டார் வாகனத் துறை நிபுணருமான அப்துல் மஜித் தெரிவித்துள்ளார்.

**வேளாண் துறை**

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், ‘‘வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது இன்னும் குறைவாகத்தான் உள்ளது. எனவே, நீண்ட கால அடிப்படையில் டிராக்டர் பயன்பாடு மிகவும் அதிகரிக்கும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் டிராக்டர் விற்பனை ஆண்டிற்கு சராசரியாக 10–12 சதவீதம் வளர்ச்சி காணும்’’ என்று தெரிவித்தார். பல நோக்கங்களுக்கு பயன்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பத்தில் இயங்கும் டிராக்டர்களை வாங்குவதற்காக விவசாயிகள் அதிக முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று எஸ்கார்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் நிகில் நந்தா தெரிவித்துள்ளார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் டிராக்டர் விற்பனையில் தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்படும் என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பணவீக்கம் அதிகரிப்பு, விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நிறுவனங்கள் காட்டி வரும் தயக்கம் போன்ற காரணங்களால் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஐந்து சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.

இந்நிலையில், டிராக்டர் விற்பனை அதிகரித்து வருவது ஒரு நல்ல சகுனமாகும் என்றும், நடப்பு 2014–15–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் மந்தநிலையிலிருந்து வளர்ச்சி பாதைக்கு திரும்பும் என்றும் மோட்டார் வாகனத் துறை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**வர்த்தக வாகனங்கள்**

பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுவதால் வர்த்தக வாகனங்கள் விற்பனை அதிகரிக்கும். தனிநபர் செலவிடும் வருவாய் உயர்வதால் பயணிகள் கார் விற்பனை அதிகரிக்கும்.

ஒட்டுமொத்தத்தில் நடப்பு நிதி ஆண்டில் மோட்டார் வாகனத் துறை மீண்டும் வளர்ச்சி பாதைக்கு திரும்பும் என்பது நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

**கத்தரிக்காய் வெண்டை விலை சரிவு**



**சேலம்,**

சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, ஓமலூர், தாரமங்கலம், அயோத்தியாபட்டணம் உள்ளிட்ட இடங்களில் தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு விளைவிக்கக்கூடிய காய்கறிகளை விவசாயிகள் சேலத்தில் உள்ள உழவர் சந்தைகளுக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

தற்போது கத்தரிக்காய், வெண்டைக்காய் விளைச்சல் அதிகமாக இருப்பதால் அதன் விலைகள் குறைந்துள்ளது. சேலம் அஸ்தம்பட்டி உழவர் சந்தையில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ. 26-க்கு விற்பனை செய்த வெண்டைக்காய் நேற்று ரூ. 10 குறைந்து ரூ. 16-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், கடந்த வாரம் ரூ. 20-க்கு விற்கப்பட்ட கத்தரிக்காய் ரூ. 4 குறைந்து நேற்று ரூ. 16-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதுதவிர, பந்தல் காய்கறிகளான பாகற்காய், பீர்க்கங்காய், அவரை, புடலை ஆகியவை விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. அதாவது கடந்த வாரம் ரூ. 20-க்கு விற்கப்பட்ட பந்த காய்கறிகள் தற்போது ரூ. 10 உயர்ந்து ரூ. 30 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.